செ.வெ.எண்: 90 நாள்: 30.08.2016

## *புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தண்ணீர் தொட்டிகள் அமைப்பதற்கான பூமிபூஜையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.*

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் ஊர்பொதுமக்கள் மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புதிய தண்ணீர் தொட்டிகள் அமைப்பதற்கான பூமிபூஜை விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த புதிய தண்ணீர் தொட்டிகள் அமைப்பதற்கான பூமிபூஜை விழாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

விராலிமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலுக்கு தரிசனம் செய்ய தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றார்கள். இவர்களுக்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தொழில்அதிபர் சேதுராமன் குடும்பத்தார், ஊர்பொதுமக்கள் மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் மலைமீது 50000 லிட்டர் மற்றும் அடிவாரம் ஈசான மூலையில் 75000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 தண்ணீர் தொட்டிகள் அமைப்பதற்கு பூமிபூஜை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கோவிலுக்கு வரும் பக்தர்களின் தண்ணீர் தேவை முழுவதுமாக பூர்த்தி செய்யப்படும்.

மேலும் தமிழகஅரசு அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலுக்கு மலைமீது சாய்தளப்பாதை, புதிய குடிநீர் தொட்டிகள், மலைமீது ஒளிரும் மின்விளக்குகள், வெள்ளிரதம் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றியுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, ஒன்றியக் குழுத் தலைவர் திரு.சுப்பையா, காவல் ஆய்வாளர் திரு.மாறன், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.ரெ.கிருஷ்ணன், ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.விஜயநாதன், திருமதி.உதயக்குமாரி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**